புதுமலர்: 09 தை - மாசி இதழ்: 01

2012

# அனல்

"தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்: நீர்
செய்ய நினைத்தது தடைபடாது"
யோபு 42:2

இணை ஆசிரியர்கள்
யோ.நிக்ஷன், வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.01.2012

# பொருளடக்கம்


※ அனலின் குரல்
※ கதையும் கற்றதும் : எப்படி நடந்து கொள்கிறாய்?
※ வாலிபர் வளாகம்
※ கவிதை : என்ன செய்ய வேண்டிய நீ... என்ன?
※ மனைவி
※ கர்த்தர் எனக்கு சகாயர்
※ பக்தர்களின் பயிலகம்
※ நற்செய்தி : எது தேவை
※ வினா விடை : 49
※ பதில்தர வேண்டாமா?
※ குறுக்கெழுத்துப் போட்டி : 47
※ அருட்பணியாளர் சரிதை
※ மூவரி முத்துக்கள்
※ புத்தாண்டின் வாக்குத்தத்தச் செய்தி


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய விலாசம்

சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்,
உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்




**அன்பின் அனல் வாசகர்களுக்கு!**

இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில்
புதுவருட வாழ்த்துக்கள்..

**தேவன்** கிருபையாய் இரங்கிக் கொடுத்த இந்தப் புதிய ஆண்டின் தொடக்கத்திலே நாம் ஒரு விசை கடந்த ஆண்டில் தேவன் நமக்குச் செய்த நன்மைகளை நினைவு கூருவோம். அதற்காக தேவனுக்கு நன்றிகளையும் துதிகளையும் ஏறெடுப்போம்.

நாம் சோர்ந்து போன நேரங்களிலெல்லாம் அவரது கிருபை எமக்குப் பெலன் கொடுத்தது, சத்துவமில்லாத நேரங்களில் சத்துவம் கொடுத்தது. நெருக்கப்பட்ட நாட்களிலெல்லாம் எமக்கு விசாலமுண்டாக்கி, மனிதர்களால் ஒடுக்கப்பட்ட வேளையிலெல்லாம் எமக்கு உதவி செய்து, துன்பம், துக்கம், வேதனை, இழப்பு, எதிர்ப்பு, சோதனை, வியாதி, வறுமை, தனிமை, கைவிடப்பட்ட நிலமை, ஒன்றுமில்லாத வேளை, என்ன செய்வது என்ற ஏக்கம், ஏமாற்றம், மனிதர்களால் புறக்கணிப்பட்ட நிலமை **இப்படியான வேளைகளிலெல்லாம் அவர் ஒருவரே சகல ஆறுதலின் தேவனாகவும், சமாதானப் பிரபுவாகவும் இருந்து எம்மைப் பாதுகாத்தார்.** கொடுத்த வாக்குத்தத்தில் உண்மையுள்ளவராகவும் இருந்தார். **"பயப்படாதே"** என்று சொல்லி அணைத்துக் கொண்டார். ஏற்ற வேளைகளிலே எமது ஜெபங்களுக்கெல்லாம் பதில் தந்தார். **அவர் ஒருவரே உண்மையுள்ளவர். எம்மைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒருவர் இந்த இயேசு கிறிஸ்துவே.**






ஆகவே பிரியமான சகோதர, சகோதரிகளே, இந்தப் புதிய ஆண்டிலே வேதம் சொல்வது போல எல்லாவற்றிற்காகவும் தேவன் ஒருவருக்கே நன்றி செலுத்துங்கள். தீமைகளை நன்மையாக மாற்றுபவரும், கோணலானவற்றை நேராக்குபவரும், கரடுமுரடானவற்றை சமமாக்குபவரும், பள்ளங்களையெல்லாம் நிரப்புகிறவரும், பரிசுத்தமுள்ளவருமான இயேசு கிறிஸ்துவையே நோக்கிப்பாருங்கள். **உங்களுக்கு எல்லா வேளையிலும் உதவி செய்யக்கூடியவர் அவர் ஒருவர் மாத்திரமே.**

இந்தப் புதிய ஆண்டிலே அவர் உங்களுக்காக யுத்தம் செய்ய ஆயத்தமாக இருக்கின்றார். உங்களை ஆசீர்வதிக்க அவர் ஆயத்தமாக இருக்கின்றார். **இப் புதிய ஆண்டில் முதலாவது தேவனுக்கு கொடுக்க வேண்டிய நேரங்களை அதிகரியுங்கள். உபவாசத்தைக் கூட்டுங்கள். மகா பரிசுத்தமுள்ள விசுவாசத்துடனும், மாசற்ற இருதயத்துடனும், அவரையே நோக்கிப்பார்த்து ஓடுங்கள். பாவத்தை விட்டு விலகுங்கள். எல்லாவற்றிலும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாயிருங்கள்.** அப்பொழுது அவர் உங்களை ஆசீர்வதிப்பார். உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்.

— ஆசிரியர் —





# கதையும் கருத்தும்



## எப்படி நடந்து கொள்கின்றாய்?

நடுத்தர வயதுள்ள பெண்மணி ஒருவர் வீதியில் வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தாள். திடீரென அவளருகே சென்று கொண்டிருந்த இன்னொரு நபருடன் தெரியாமல் மோதிக்கொண்டாள். **"தயவு செய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், தெரியாமல் மோதிவிட்டேன்"** என்று தயக்கத்துடன் கூறினாள். **"என்னையும் மன்னித்துக் கொள்ளுங்கள், நீங்கள் வருவதை நானும் அவதானிக்கவில்லை"** என்றார் மற்ற நபர். இருவரும் புன்னகையுடன் விடைபெற்றனர்.

வீட்டிற்கு வந்த அந்தப் பெண்மணி வீட்டு அலுவல்களில் மிகவும் பரபரப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். செய்ய வேண்டிய வேலைகள் அநேகமாயிருந்தன. ஒரே பரபரப்பு!. சமையல் பாத்திரங்களை கழுவு வதற்காக திரும்பியவள் அருகே அவளது சிறிய மகன் நின்றதை கவனிக்க வேயில்லை. இருவரும் மோதிக்கொள்ள பாத்திரங்கள் கைநழுவி அங்குமிங்குமாக விழ அந்த பெண்மணிக்கு வந்த கோபத் திற்கு அளவேயில்லை. **"தள்ளிப்போ!"** என்று தனது மகனை கோபத்துடன் கடிந்து கொண்டாள். அந்த சிறு பையன் மனமுடைந்தவனாக வெளியேறினான். **தான் கடினமாக நடந்து கொண்டதை அவள் அந்நேரம் உணர வாய்ப்பில்லை.**

அன்றிரவு அவள் தனது படுக்கையிலே இருக் கையில் தேவன் அவளோடு இடைப்பட்டார். **"இன்று ஒரு முன்பின் தெரியாத நபரோடு எவ்வளவு கனிவாக நடந்து கொண்டாய். ஆனால், உன்னை நேசிக்கும் குடும்பத்தோடு உன்னால் அப்படி நடந்து கொள்ள முடியவில்லையே, ஏன்?... உன் சமையலறைக்கு சென்று பார், அங்கே ஓர் ஓரமாக சில ரோஜா மலர்கள் காணப்படும். அந்த மலர்கள் உன் மகன் உனக்காக அன்போடு கொண்டுவந்தவை. உனக்கு அவை மிகவும் பிடிக்கும்**

*என்பதற்காக அவன் அவற்றை பறித்து வந்தான். உனக்குத் தான் தரம்போகும் அச்சரியம் சற்றேனும் குறையக்கூடாது என்ற எண்ணத்தோடு அவன் உன் பின்னே சத்தமிடாது நின்று கொண்டிருந்தான். ஆனால்???.... அவனது கண்களில் நிறைந்த கண்ணீரை நீ காணவேயில்லை."*

அந்தப் பெண்ணின் இருதயம் சுக்குநூறாய் உடைந்தது. தான் நடந்து கொண்ட விதத்தை எண்ணி வெட்கப்பட்டாள். கண்களில் கண்ணீர் பெருக தன் மகனருகே சென்று அமர்ந்தாள். அவனது பிஞ்சுக்கரங்களைப் பற்றிக் கொண்டு, *"எழுந்திரு என் மகனே, இந்த ரோஜாக்களை நீ எனக்காகவா எடுத்து வந்தாய்?"* என்று கேட்டாள். *"ஆம் அம்மா, அவற்றை நான் உங்களுக்காகவே எடுத்து வந்தேன், ஏனெனில் அவை உங்களைப் போன்றே அழகாக உள்ளன"* என்றான். *"மகனே! என்னை மன்னித்துக் கொள், நான் அவ்வாறு கடினமாய் நடந்திருக்கக்கூடாது"* என்று கூறி தன் மகனை கட்டி அணைத்தாள் அந்த அன்புத்தாய். *"அம்மா! நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்"* என்றது அந்த மழலைக் குரல்.



ஆம்! இவ்வாறான பல சம்பவங்கள் எம் வாழ்வில் அன்றாடம் நடைபெறுகின்றன. நாம் எப்படி நடந்து கொள்கின்றோம்? **தேவன் எமக்குத் தந்த விலையேறப் பெற்ற நிறைவான பொக்கிஷம் எம் குடும்பமே!**. தேவன் எமக்கு குறித்து வைத்துள்ள வாழ்நாட்களின் எல்லையை நாம் அறியோம். அதுவரை எம் குடும்பத்தில் அன்பும் பாசமும் வெளிப்படட்டும். **இன்றோ... நாளையோ... நாம் மரித்தால் நாம் வேலை செய்த வேலைத்தளத்தில் இன்னொரு நபரை இலகுவாக நியமித்துக் கொள்வார்கள். ஆனால் குடும்பத்தில்??? அந்த இழப்பு என்றுமே ஈடுசெய்ய முடியாதது.** எம்மை நேசித்த அந்த குடும்பம் வாழ்நாள் முழுதும் அந்த இழப்பை அனுபவித்துக் கொண்டேயிருக்கும். இப்படியான உன்னத மான அன்பின் உறவுகளை தேவன் எமக்கு **"குடும்பம்"** என்ற வடிவில் கொடுத் துள்ளார். குடும்ப உறவுகளை கனப்படுத்துவோம். எமக்குள் இருக்கும் அன்பை வெளிப்படுத்துவோம். அன்பை கொடுத்தால் அன்பு கிட்டும். கூடவே ஐக்கியம், சமாதானம் ஏற்படும். **எனவே இந்த புதிய வருடத்தில் பிரவேசிக் கும்... நாம் இதை சற்று நிதானித்துக் கொள்வோம். தேவன் எமக்கு கிருபையாக கொடுத்த "குடும்பம்" என்ற ஈவுக்காக அவருக்கு நன்றி செலுத்துவதோடு நின்றுவிடாது அன்பான குடும்பத்தைக் கட்டியெழுப்ப குடும்பமாக செயற்படுவோம்.**

"உங்கள் அனைவருக்கும் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்"

ஜெ. இன்பரூபன்




# வாலிபர் வளாகம்


## சூழ்நிலைகளை மாற்ற முன்பதாக நபர்களை உருவாக்கும் தேவன்!



**உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்! மறுபடியும் இப் புதிய ஆண்டில் வாலிபர் வளாகத்தினூடாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.**

காலா காலமாய் தொடர்ச்சியாக தேவனுடைய ஆளுகையும் அவரது செயலின் நடைமுறையும் இந்த உலகில் செயற்பட்டு வருவது நாம் அனைவரும் அறிந்த ஓர் பேருண்மையாகும். அந்த வகையிலே வித்தியாசம் வித்தியாசமான சூழ்நிலமைகளிலே தேவன் மனிதர்களை எவ்விதம் எழுப்பி அச் சூழ்நிலைமையை மேற்கொள்ளத்தக்கதான பெலத்தையும் கிருபையையும் அருளினார் என்பது சத்திய வேதம் காட்டி நிற்கின்றது.

**அந்த வகையிலே மிக மோசமான சூழ்நிலையில் மாட்டியிருந்த வாலிபனை தேவன் எவ்விதம் அவனை உருவாக்கியது மட்டுமல்ல அந்த சூழ்நிலையில் இருந்தும் வெளியே வரவும் அனேகம் ஆயிரம் ஆயிரம் ஆத்துமாக்களுக்கு ஆதரவாகவும், தலைவனாகவும் ஏற்படுத்தினார் என்பதனை பார்ப்போம்.**



சகோதரர்களாலே துன்புறுத்தப்பட்டு, நிந்திக்கப்பட்டு, மரணத்திற்கு நியமிக்கப்பட்டு பின் ஆதரவற்றவனாக தூர தேசத்திற்கு போகும் வியாபாரிகளின் கையில் 20 வெள்ளிக்காசிற்கு விற்கப்பட்டு தகப்பனை விட்டு பிரிக்கப்பட்டவன் யோசேப்பு. புதிய தேசம், புதிய மொழி,

புதிய கலாச்சாரம். புதிய புதிய காரியங்கள். பார்வோனின் பிரதானிகளில்தலைவன்போர்த்திபார்என்பவன்யோசேப்பை விலைக்கு வாங்கினான். **ஒவ்வொரு நாட்களும் செல்ல செல்ல யோசேப்பின் சூழ்நிலை கடினமாகிக் கொண்டே செல்கின்றது. நெருக்கம் அதிகரிக்கின்றது. வலைப்பழு அதிகரிக்கின்றது.** வசனம் சொல்லுகிறது: **ஆதியாகமம் 39:20 யோசேப்பின் எஜமான் அவனைப் பிடித்து, ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர்கள் இருக்கும் சிறைச்சாலையிலே அவனை ஒப்புவித்தான். அந்தச் சிறைச்சாலையில் அவன் இருந்தான்.**

**ராஜாவின் கட்டளை இல்லாமல் ராஜா கட்டளையிடும் சிறைச்சாலையில் போடப்பட்டான்.** யோசேப்பு இது தவறு (பிழை) இது போர்த்திபாரின் செல்வாக்கு. ராஜாவுக்கும், தேசத்திற்கும் விரோதமாக குற்றம் இழைத்தவர்கள் **ராஜதுரோகம் செய்தவர்கள் போடப்படும் சிறைச்சாலை** அங்கு போகிறவர்களின் முடிவு மரணம்தான். திரும்பி வர முடியாது. அது ஆண்டவனுக்கு அதாவது ராஜாவுக்கு விரோதமான துரோகம் என்று சொல்லி அங்கு போடுவார்கள். பூமிக்கு கீழாக இருக்கும் வெளிச்சத்தைக் காணமுடியாதபடி ஒரே இருட்டாக இருக்கும். மிகவும் பயங்கரமான சிறை. அங்கு செல்கிறவர்களுக்கு இருக்கும் ஒரே ஒரு நம்பிக்கை என்னவென்றால் என் முடிவு இனி மரணம் தான் என்பதாக. **அப்பேற்பட்ட ஓர் பயங்கரமான சிறையிலே யோசேப்பு போடப்பட்டான். அங்கே யோசேப்பு இருந்தான்.**

கவனியுங்கள் இந்த சூழ்நிலைக்கு யோசேப்பு வந்தும் தேவனைக் குறித்தோ, பெற்றோரைக் குறித்தோ, தன்னை விற்றுப்போட்ட சகோதரரைக் குறித்தோ, ஏன் போர்த்திப்பாரைக் குறித்தோ வீண் வார்த்தைகள், முறு முறுப்புக்கள், அவதூறான பேச்சு ஒன்றிலும் ஈடுபடவில்லை. **தன்னையும் தன் நிலையையும் நிரூபிக்க முற்படவுமில்லை.** காரணம், கண்கள் திறக்கப்பட்டு ஒரு வாலிபன் அழைப்பை புரிந்து கொண்டவன், தன் தேவன் யார் என்பதனையும் அவருடைய கரம் குறுகி போகவில்லை என்பதனையும் விளங்கிக் கொண்ட யோசேப்பு சிறைச்சாலையில் இருந்தான்.

## சிறைச்சாலையில்......

## கர்த்தர் யோசேப்போடே இருந்தார்:

யோசேப்போடே கூட கர்த்தரும்சிறைச்சாலையில்இருந்தார் என்பது எவ்வளவு ஆச்சரியமாய் இருக்கின்றது. **பரிசுத்தத்துக்காக பிரிந்து வைராக்கியமாய் தனித்து நின்றாலும் நீ ஒருவன், ஒருத்தி மாத்திரமாக இருந்தாலும் தேவன் உன் பக்கம் என்பதனை எப்போதும் மறந்து விடாதே.** தேவனுக்கு விரோதமாய் தன்னுடைய சொல், செயல், சிந்தை இருந்து விடக்கூடாது என்பதில் எப்போதும் யோசேப்பு விழிப்பாக இருந்தபடியினால் தேவனும் அவனோடு கூட இருக்க வாஞ்சித்தார், வாசம் பண்ணினார். **உன்னோடு எப்படி?**

## கிருபை கிடைத்தது

தேவனுடைய கிருபை யோசேப்புக்கு கிடைத்தது. மெய்யாகவே வாலிப ஜீவியத்தில் தடம் புரளாமல், சோர்வுறாமல், மந்த நிலையை மேற்கொள்ள தோல்விகளை வெற்றியின் படிக்கற்களாக மாற்றி செல்ல **தேவ கிருபை வேண்டும், வேண்டும்.**

## தலைவனுடைய தயவு/மனுஷ தயவு

தேவகிருபை பெற்றவர்களுக்கு கூடவே மனுஷ தயவும் வரும். யோசேப்புக்கு சிறைச்சாலை தலைவனின் தயவு கிடைக்கப்பெற்றதும் தலைவன் யோசேப்பையும் அவன் காரியங்களையும் விசாரிக்கவில்லை. காரணம் அந்த அளவுக்கு அவன் ஒழுக்கம் உள்ளவனாக உண்மை நிறைந்தவனாக ஓர் உத்தமனாக சிறையிலும் வாழ்ந்தான்.

## உயர்வு பெற்றான்

அங்கே சிறைச்சாலைத்தலைவன் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட யாவரையும்யோசேப்பின் கையிலே ஒப்புவித்தான். அவர்கள் செய்வதுஎல்லாவற்றையும்யோசேப்பு செய்வித்தான். **ஆதியாகமம் 39:22 சிறைச்சாலைத் தலைவன் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட யாவரையும் யோசேப்பின் கையிலே ஒப்புவித்தான் அங்கே அவர்கள் செய்வதெல்லாவற்றையும் யோசேப்பு செய்வித்தான்.** ***சிறையிலும் பயிற்றுவிக்க ஏன் தேவனாலே கூடும்.*** சிறைச்சாலை பொறுப்புக் களை மிக சிறப்பாக யோசேப்பு செய்வித்தான். இது ஓர் தேசத்தை நடத்துவதற்கு பராமரிப்பதற்கான ஆரம்ப ஆயத்த ஸ்தலம். **தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை செவ்வனவே செய்து முடிக்கும் ஓர் வாலிபன்.**

எத்தனையோ ஆட்கள் இந்த சிறைச்சாலையில் வந்திருப்பார்கள். எத்தனை ஆண்டுகளாக இவன் சிறைச்சாலை தலைவனாக இருந்தானோ தெரியாது. ஆனால் சிறைச்சாலை தலைவன் என்னும் பதவியை அடைய பல ஆண்டுகள் ஆகியிருக்கும். ஆனால் யோசேப்பின் வித்தியாசத்தை இனம்கண்டு அவனுக்கு உயர்வு கொடுக்கின்றான். யோசேப்பு சிறைச்சாலை தலைவனை கவர்ந்து விட்டான். அவனுடைய எதிர்பார்ப்பிற்கு நல்ல பாடம் புகட்டிவிட்டான். **மெய்யான உயர்வு உன்னதத்தில் இருந்து வருகின்றது.**

## செய்தது எல்லாம் வாய்க்கப்பண்ணினார்

யோசேப்பு எதை பொறுப்பெடுத்து செய்தாலும் சிறைச்சாலைக்குள் அந்த அந்த பகுதியிலே பெரிய ஆசீர்வாதம் பொறுப்புக்கள் மாற்றப்பட்டு யோசேப்பிடம் ஒப்படைக்கப்பட்டாலும் **அந்த பகுதியில் ஆசீர்வாதம், திருப்தி, குளப்பம் இல்லாத நிலை.**

## பானபாத்திரக்காரனுக்கும் சுயம்பாகிக்கும் யோசேப்பின் பதில்

அவர்கள் கண்ட கனவிற்கு எந்த எந்த அர்த்தத்தை சொன்னானோ அப்படியே நிறைவேறியது. இ.. தேவன் அவனை ஆயத்தப்படுத்தலின் உச்ச நிலைக்கு கெ... டு வந்ததைக் காண்பிக்கின்றது. பானபாத்திரக்காரனிடம் யோசேப்பு கூறியது நீ வாழ... இருக்கும்போது என்னை நினைத்துக்கொள் என்பதாக. ஆனால் அவனோ இரண்டு வருடங்களாக யோசேப்பை மறந்து விட்டான். **யார் மறந்தாலும் தேவன் மறக்காதவராகவே இருக்கின்றார். சரியான நேரத்தில் யோசேப்பை தேவன் உயர்த்துகின்றார்.**

கர்த்தர் யோசேப்போடே இருந்தும்
கிருபை கிடைக்கப்பெற்றும்
மனுஷ தயவை பெற்றிருந்தும்
உயர்வை பெற்றும்
செய்தது எல்லாம் வாய்க்கப்பெற்றதும்
சரியான அர்த்தத்தை சொல்லியும்

**யோசேப்பு இருந்த இடம் சிறைச்சாலை தான். வேத ஆராச்சியின்படி ஏறத்தாள 13 ஆண்டுகள் அவன் பட்ட துன்பமும் வேதனையும் உபத்திரவங்களும் யோசேப்பை உருவாக்கியதே அன்றி அவனை சிதைத்து விடவில்லை.**

சூழ்நிலைமைகளை மாற்ற முன்பதாக தேவன் யோசேப்பை தயார்ப்படுத்தி பக்குவப்படுத்தி ஓர் உத்தம தலைவனாக உருவாக்கி பின் சூழ்நிலைகளை மாற்றுகின்றார்.

***உதாரணமாக:*** *சேற்றிலிருக்கும் ஓர் பன்றியை நாம் வெளியே எடுத்து தூய்மைப்படுத்தி உயர் வஸ்திரங்களை அணிந்து அழகான இடத்தில் வைத்தால் இப்போ சூழ்நிலை நிச்சயமாக மாறி இருக்கின்றது. ஆனால் மறுபடியும் சேற்றில் அது போகுமானால் அதனுடைய சரியான காரியம் பன்றி மாற்றப்படவில்லை என்பதாகும். முதலாவது பன்றி ஓர் தீர்மானத்திற்குள் வரவேண்டும் என்ன வந்தாலும் நான் இனி பழைய நிலைமைக்கு திரும்புவது இல்லை என்பதாக. அப்போது மாத்திரமே சூழ்நிலையை மேற்கொள்ள முடியும்.*

**எனக்கு பிரியமானவர்களே இந்த புதிய ஆண்டிலும் உங்களை தயவாக வேண்டி நிற்கும் காரியம் என்னவெனில் உன்னை உருவாக்க வனைய அவர் கரத்தில் ஒப்படை. நெருக்கமான, வேதனையான சூழ்நிலைகளில் தேவன் உன்னோடு இருக்கின்றார் என்பதனை நிச்சயப்படுத்து.**

**யோசேப்பை உயர்த்தி ஆசீர்வதித்து மகிழ்ந்த ஆண்டவர் இந்த ஆண்டிலும் உன்னை மேன்மையாக வைப்பார்.**

**போதகர் வேதநாயகம் சுமணன்.**



# என்ன செய்ய வேண்டும் நீ... என்ன?...




அழிந்து போகும் ஆத்துமாவைத் தேடவேண்டியோரே

அடுக்குமாடி கட்டி வங்கிகளில் பணம் நிரப்பி

அடுத்தவனின் உழைப்பில் ஆறுதல் அடைவோரே

**அடுக்கடுக்காய் அழிகின்ற ஆத்துமாவை நினைப்பீரோ?**



அழைத்த தேவன் அடுத்தவரை அழைக்கவே

அழைத்தார் என்பதை அடியோடு மறந்த தேவஜனமே!

அருட்பணி மறந்து பொதுப்பணியாற்றும் தொண்டர்களே!

**அறுவடைக் களத்தை அசிங்கப்படுத்தாதிருங்கள்.**

அலைந்து தொலைந்து திரியும் ஆத்துமாக்களை

அணி அணியாய் தேடித் திரிந்து சேர்த்து

அள்ளிக் கொடுத்தால் ஆண்டவரின் கணக்கன்று

**அக்களிப்புடன் அருமைக் கிரீடம் பெறுவாயே அன்று!**

அன்பின் சத்தியத்தை சொல்லாமலும் [illegible] செய்யாமலும்

அன்பரின் [illegible] ஊழியக்காரன் என்பதெல்லாம் பொய்

அல்லல் [illegible] வாழ்க்கைச் [illegible]

**அருமை இயேசுவின் பாதத்தருகிலே கட்டிவிடுவோம்**

வா!!!






# மனைவி




ஆதாமுக்கு தேவன் ஏற்ற துணையை உருவாக்கி ஆதாம் தன் மனைவியோடே இசைந்திருக்க வேண்டும் என்று **ஆதியாகமம் 2:24ல்** கூறப்பட்டுள் ளது. எனவே திருமணம் முடித்த பெண்கள் எல்லாருமே மனைவி என்றழைக்கப்படுவார்கள்.

**இன்று நீ மனைவி என்ற ஸ்தானத்தில் இருப்பாயாகில், மனைவிக்குரிய ஆங்கில எழுத்தாகிய WIFE** என்ற வார்த்தையை ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

## W- Wisdom (புத்திசாலி)

**1சாமுவேல் 25:3 அந்த மனுஷனுக்கு நாபால் என்றும், அவன் மனைவிக்கு அபிகாயில் என்றும் பெயர் அந்த ஸ்திரீ மகா புத்திசாலியும் ரூபவதியுமா யிருந்தாள் அந்தப் புருஷனோ முரடனும் துராகிருதனுமா யிருந்தான் அவன் காலேபுடைய சந்ததியான்.** புருஷன் முரடனும் துரோகியுமாக இருந்தான், ஆனாலும் அவன் மனைவியைக் குறித்து புத்திசாலி என்று எழுதப் பட்டுள்ளது. அபிகாயிலுக்கும் அவளுடைய வீட்டார் எல்லார் மேலும் பொல்லாப்பு வருகிறதாக அறிவிக்கப்பட்டது. **(1சாமுவேல் 25:17) 1சாமுவேல் 25:18ஆம்** வசனத்திலிருந்து அவதானித்தால் இதைக்கேட்ட அவள் தீவிரமாய் புத்தியாய் செயற்பட்டபடியினால் எல்லார் மேலும் வர இருந்த பொல்லாப்பிலிருந்து பாதுகாத்தாள். **மனைவியாகிய நீயும் ஞானமாய் நடந்தால் உன் வீட்டாரும் பாதுகாக் கப்படுவார்கள். எனவே ஒரு சிறந்த மனைவிக்கு புத்திசாலித்தனம் மிக அவசியம்.**

## I- Ideal (ஏற்ற துணை)

**ஆதியாகமம் 2:18 பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப் பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.** ஆதாமுக்கு ஏற்ற துணையை உண்டாக்குவேன் என்று

சொன்ன தேவன், உன்னையும் உன் சொந்த கணவனுக்கு ஏற்ற துணையாகவே உருவாக்கியுள்ளார். கணவன் எப்படிப்பட்டவராக இருந்தாலும் நீ தான் அவருக்கு ஏற்ற துணையாக தேவனால் ஏற்படுத்தப் பட்டவள் என்பதனை மறந்து போகாதே. **ஆதியாகமம் 24:67ல்** ஈசாக்கு துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான் என வாசிக்கின்றோம். **ஏற்ற துணையாக இருக்கும் நீ, உன் கணவனுக்கு ஆறுதலாக இருக்க வேண்டும்.**

## F- Faithful (உண்மைத்துவம்)

**நியாயாதிபதிகள் 13:3 கர்த்தருடைய தூதனானவர் அந்த ஸ்திரீக்குத் தரிசனமாகி, அவளை நோக்கி: இதோ, பிள்ளைபெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்.** மனோவாவின் மனைவி மலடியாய் இருந்த போது கர்த்தருடைய தூதன் அவளுக்கு தரிசனமாகி, அவர்களுக்கு பிறக்கப் போகும் பிள்ளையைப் பற்றி அறிவித்த போது புருஷன் அவளுடன் இருக்க வில்லை. ஆனால் **நியாயாதிபதிகள் 13:6ம்** வசனத்தில் புருஷனிடத்தில் தேவனுடைய மனுஷன் சொன்ன எல்லாவற்றையும் சொல்லிவிடுகின்றாள். இரண்டாம் தடவை தூதன் தோன்றிய போது, புருஷனுக்கு அதை அறிவித்து அவனையும் தூதனிடம் கூட்டி சென்றாள் என 10ம் வசனம் குறிப்பிடுகின்றது. குறையுடன் இருந்த மனைவிக்கு குறை நீக்கப்பட்டது. **மனைவியாகிய நீயும் உன் புருஷனுக்கு ஒன்றும் ஒளிக்காமல் எல்லாவற்றிலும் உண்மையுள்ளவளாக இருந்தால் உன் குறை நீங்கும்.**

## E- Efficient (கெட்டித்தனம்)

ஆபிரகாம் சாராள் இருவரும் வயது சென்று பிள்ளைகள் இல்லாமல் இருந்த போது, அந்நிய மனிதர்களை விசாரித்து தன்னுடைய வீட்டுக்குள் அழைத்து சாராளிடம் அப்பம் சுடும்படி கூறினான். அவள் கெட்டித்தனமாக கூடாரத்திற்குள் இருந்து எல்லாவற்றையும் செய்ததின் நிமித்தம் பிள்ளை பாக்கியம் கிடைத்தது. 14ம் வசனத்தின்படி **கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? மனைவியாக இருக்கும் நீ கெட்டித்தனமாக உன் கணவனுக்கு எல்லாவற்றையும் கீழ்ப்படிவுடன் செய்தால் கர்த்தரால் எல்லாம் ஆகும்.**

மனைவி என்ற ஸ்தானத்தில் இருக்கும் அனைவரும் புத்திசாலியாய், ஏற்ற துணையாய், உண்மைத்துவமாய், கெட்டித்தனமாய் இருப்பீர்களானால் உங்கள் குடும்பம் 2012ஆம் ஆண்டில் ஒரு மகிழ்ச்சியான குடும்பமாக விளங்கும். ***உங்கள் வீடு ஒரு குட்டிப்பரலோகமாய் விளங்கும்.*** தேவனுக்கு முழுமையாய் அர்ப்பணித்து கீழ்ப்படிவுடன் ஒரு சிறந்த மனைவியாய் இருக்க தீர்மானம் எடுப்பீர்களாக இருந்தால் ***அவர் சகலத்தையும் செய்ய வல்லவராக உங்கள் குடும்பத்தில் அவர் செய்ய நினைத்தது அத்தனையும் தடைபடாமல் செய்து முடிப்பார்.***

**தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.**

திருமதி J.பிலிப்

# கர்த்தர் எனக்குச் சகாயர்
# The Lord is my helper

இயேசுவை விசுவாசித்து அவர் மீது நம்பிக்கையும் அன்பும் வைக்கும் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாகவே அவர் சகாயராக வெளிப்படுவார்.

ஒவ்வொரு மனிதனும் ஒருவிதமான உதவிக்காக அல்லது வித்தியாசமான உதவிக்காக ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ வேண்டியுள்ளது. **உலகில் முழுமையான ஓர் உதவியையும் இளைப்பாறு தலையும் மனிதன் கிறிஸ்துவிலேதான் கண்டடைய முடியும்.** அவர் (இயேசு) சொன்னார்: **வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னண்டை வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

இந்த ஆண்டில் நீ இயேசுவண்டை ஓடிவா! அவர் பாதம் சரண் அடை. அவரின் அன்புத் துடிப்பு உன் காதுகளில் ஒலிக்கவில்லையா? சகாயம் பண்ணவும் இளைப்பாறுதல் தரவும் இயேசு ஆயத்தமுள்ளவராய் இருக்கின்றார்.

ஏற்ற வேளையில் ஏற்ற உதவி செய்ய அவர் போதுமானவராய் உன் வாழ்வில் கடந்து வருவார். ஒரு வேளை எனக்கு யாருமே இல்லை, எல்லாரும் என்னை மறந்துவிட்டார்கள், ஒரு பணமும் என் கையில் இல்லை, நம்பினவர்கள் என்னை நினைக்கவில்லை. என் வாழ்வு எனக்கே பாரமாக இருக்கின்றது என்று நீ சலிப்போடு இந்த ஆண்டும் எப்படி இருக்கும், எப்படி சமாளிக்க போகின்றேன் என எண்ணலாம். உனக்காக கல்வாரியில் யாவையும் செய்து முடித்த இயேசு கிறிஸ்து சகாயராய் (உதவி செய்பவராய்) உன்னோடேகூட வருபவராக இருக்கிறார். அவருக்கு உன் வாழ்வில் முழுமையான இடம் கொடுப்பாயா?

ரேமா




# பக்தர்களின் பயிலகம்

## தீமோத்தேயு

01ம் அதிகாரம்

தொடர்ச்சி....

## 02. சுவிசேஷத்தை அறிவிப்பது.

### 1தீமோத்தேயு 1:11–17

நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷம் பவுலைத் தன் சொந்த சாட்சியைச் சொல்லப் பண்ணிற்று. ***சுவிசேஷம் கிரியை நடப்பிக்கும் என்பதனை நிருபிக்க பவுல் தன்னை ஓர் காட்சிப் பொருளாக வைத்தான்.*** பவுலின் சாட்சியை வாசிக்கும் போது தேவ கிருபையின் அற்புதத்தையும் இரட்சிக்கும் வல்லமையையும் காணலாம்.

### 01. பவுல் முன்னிருந்த நிலை – 1தீமோத்தேயு 1:13

**முன்னே இவன் தூஷிக்கிறவன்.** ஏன் இவன் கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலித்தவன். ***அத்துடன் மற்றோரும் மறுதலிக்க வற்புறுத்தியவன்.*** அடுத்து துன்பப்படுத்துகின்றவன். சபை நிர்மூலமாக சரீர பெலத்தை பாவித்தவன். ***அப்போ.9:1ன் படி கொலைப்பயமுறுத்தல் அதுவே அவன் வாழ்வின் மூச்சு.*** இவன் உண்மையாக கிறிஸ்தவ சபையைத் துன்பப்படுத்தி, கடைசியாக மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் மீதே கைபோட்டேன் என்பதனை அறிந்தான்.

**அடுத்து கொடுமை செய்கின்றவன்.** இப் பதம் பெருமையையும் அவமரியாதையும் நிறைந்ததைக் குறிக்கின்றது. ***இது வன்செயலைச் செய்யத்தூண்டும்.*** ஆனால் சவுலுடைய தேவபயமற்ற நடத்தைக்கு காரணம் அறியாமையும் அவிசுவாசமும் ஆகும். ***இப் பவுல் புத்திசாலியாக இருந்தும், நன்றாகக் கற்றவனாய் இருந்தும் சத்தியத்திற்கு அவன் சிந்தை குருடாகவே இருந்தது.*** இவன் சமயப்பற்றுள்ளவன். ஆனால் இவன் பரலோகம் நோக்கிச் செல்லவில்லை.

### 02. பவுலின் இரட்சிப்பு - 1தீமோத்தேயு 1:13-15

எவ்விதமாக ஒரு பரிசுத்தமுள்ள தேவன் சுயநீதியுள்ள பாவியை இரட்சிக்கவும் மன்னிக்கவும் முடியும்?. ***இதற்கு மூலாதாரம் இரக்கமும் கிருபையும் ஆகும்.*** தேவன் தன் இரக்கத்தினாலே பவுல்

பெறுவதற்கு தகுந்ததாய் இருந்ததைக் கொடுக்கவில்லை. **மாறாக பவுல் பெற்றுக் கொள்ளத் தகாததாய் இருந்ததைக் கொடுத்தார்** தேவனது இரக்கமும் கிருபையும் தேவஅன்பு செயலாற்றுவதையே காண்பிக்கின்றது. **பவுலின் இரட்சிப்போடு சம்பந்தப்பட்ட அவனது அறியாமை என்ன?** அறியாமை தேவனுக்கு முன்பாக ஒரு சாட்டா? இல்லவே இல்லை.

**இவனது அறியாமையின் உண்மைக்காரியம் ஒரு விசேஷ யூத பிரமாணத்தோடு சம்பந்தப்பட்டிருந்தது லேவி. 5:15-19, எண் 26:22-31.** இஸ்ரவேலில் ஒருவன் அறிந்து பாவம் செய்தால் அவன் தன் ஜனத்தாரைவிட்டு அறுப்புண்டு போக வேண்டும். **ஆனால் ஒருவன் அறியாமையினால் பாவம் செய்தால் தன் பாவத்தை நிவர்த்தி செய்ய தகுந்த பலி செலுத்த அனுமதிக்கப்பட்டான்.** இயேசு சிலுவையில் ஜெபித்த போது இந்த பிரமாணத்தை அங்கீகரித்தார். லூக்கா 23:34

**அறியாமையும் கிறிஸ்துவின் ஜெபமும் இணைந்து தேவனுடைய நியாயத்தீர்ப்பை பின்தள்ள அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது.** பவுல் தான் இரட்சிக்கப்படும்படி அவர் கிருபை பரிபூரணமாய் பெருகிற்று என்றான். **அத்துடன் இந்த இரட்சிப்பு, தனக்கு மாத்திரம் அல்ல இயேசுவை ஏற்றுக்கொள்ளும் எல்லோருக்கும் உரியதென தெளிவுபடுத்துகின்றான். 1தீமோ. 1:15**

## 03. பவுல் எப்படி மாறினான் - 1தீமோத்தேயு 1:12,16

தேவ கிருபையானது துன்பப்படுத்தியவனை, கொலைஞனை ஊழியனாக, சுவிசேஷ பணியாளனாக மாற்றியது. **இவன் மாற்றம் வியக்கத்தக்கதாய் இருந்ததால் எருசலேம் சபை கூட இதை சந்தேகித்தது.** இது ஒரு ஜாலவித்தையாக இருக்கும் என. **பவுலுக்கு தேவன் ஊழியத்தைக் கொடுத்தார். பவுல் உண்மையுள்ளவன் என தேவன் கண்டார். இதனால் தேவன் அவனிடம் சுவிசேஷத்தைக் கொடுத்தார்.** இவன் அவிசுவாசியாய் சுவிசேஷத்தை அறியாதவனாய் இருந்தும் தான் அறிந்த வெளிச்சத்தின்படி நல் மனச்சாட்சி உள்ளவனாய் ஜீவித்தான். **அதிகமாக யாரெல்லாம் தொலைந்த பாவியாக இருந்த போது தவறு செய்தார்களோ** அவர்கள் இரட்சிக்கப்பட்டபின் தேவனால் ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய பயன்படுத்தப்பட்டார்கள்.

**ஒருவன் சேவைக்கான அழைப்புக்கு கீழ்ப்படியும் போது தேவன் அவனை சேவைக்கு அணிப்படுத்துவார்.** பவுல் ஒரு ஊழியக்காரனாய் மாத்திரமல்ல அவன் ஒரு மாதிரியாகவும் இருந்தான். **யாருக்கு மாதிரியாக இருந்தான்? தன் சொந்த ஜனங்களுக்கு.** இவன் தன் சொந்த ஜனங்களின் மீது பாரம் உள்ளவனாய் இருந்தான். **இஸ்ரவேல் ஜனங்களும் பவுலைப் போல் மதவாதிகளாக-சுய நீதி உள்ளவர்களாக-பிரமாணத்திற்கும் மேசியாவைக் குறித்த பிரமாணத்தின் செய்திக்கும் குருடராய் இருந்தார்கள்.** விசுவாசிக்கவும் விருப்பமில்லாதிருந் தார்கள். **ஒரு நாள் இஸ்ரவேலரும் பவுல் இயேசுவைக் கண்டவண்ணம் காண்பார்கள். சகரியா 12:10**

# 03. விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுதல். 1தீமோத்தேயு 1:18-20

உள்ளூர் சபை நிறைவேற்ற வேண்டிய 3வது பொறுப்பை பவுல் இங்கு குறிப்பிடுகின்றான். ***இங்கு பவுல் கூறுவதனை வலியுறுத்த ஒரு இராணுவ பதத்தை உபயோகிக்கின்றான். 'கட்டளை' 1தீமோ 1:18*** இது ஒரு மேலான அதிகாரியிடம் இருந்து கீழான தரத்திலுள்ள ஒருவனுக்கு கொடுக்கப்படும் அவசர ஆணைக்கு ஒத்தது. ***எபேசுவில் தேவனுக்கு சேவை செய்வது இலேசான காரியம் இல்லை.*** தீமோத்தேயு ஆணையின் கீழாக உள்ள ஒரு சேவகன். ***ஆகவே அவன் கீழ்ப்படிந்தே ஆக வேண்டும்.***

ஒரு சேவகனின் பணி தன்னை தெரிந்து எடுத்தவரைப் பிரியப்படுத்து வதே. தன்னை பிரியப்படுத்தக் கூடாது. ***எல்லாவற்றிற்கும் மேலாக தீமோத்தேயு தெய்வீக நியமனத்தின் நிமித்தமே இருக்கின்றான். இந்த சத்தியமே அவனது கஷ்ட காலங்களில் அவனுக்கு நம்பிக்கையை கொடுத்திருக்கும்.*** பவுல் இங்கே உதாரணத்தை இராணுவத்தில் இருந்து கடற்படைக்கு மாற்றினான். 1தீமோ 1:19

***பவுல் இங்கு தீமோத்தேயுவை எச்சரிக்கின்றான்.*** ஆகவே வெற்றி பெற வேண்டிய வழியை பவுல் குறிப்பிடுகின்றான். ***அது தான் விசுவாசமும் நல் மனச்சாட்சியும்.*** எம் விசுவாசத்தைக் குறித்து எம் உதட்டினால் சொல்வது மாத்திரம் போதாது. ***அந்த விசுவாசத்தை அனுதின வாழ்வில் வாழந்து காட்ட வேண்டும்.***

நல்ல ஊழியத்திற்கும் நல்ல போராட்டத்திற்கும் நல்மனச்சாட்சி மிகவும் முக்கியம். ***விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்துபவர்கள் தங்களது மனச்சாட்சிக்கு விரோதமாக பாவம் செய்பவர்கள்.*** தவறான உபதேசம் தவறான நடத்தை மூலமே ஆரம்பிக்கின்றது. வழமையாக இரகசிய பாவத்தினால் ***இமனேயும் அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்.*** இவர்கள் தங்கள் அவபக்தியான வாழ்க்கையைக் காக்க நல்மனச்சாட்சியை நிராகரித்தார்கள். ***இவர்கள் என்ன செய்தார்கள் என திட்டவட்டமாக பவுல் எதையும் சொல்லவில்லை.***

ஆனால் தூஷிப்பது அவர்கள் பாவங்களில் ஒன்று என மாத்திரம் தெரிகின்றது. ***இமனே உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என சொன்னான். 11தீமோ 2:16-18*** அந் நாட்களில் அலெக்சாந்தர் என்பது பிரபல்யமான பெயராக இருந்தது. ***11தீமோ 4:14ல் கூறப்பட்ட மனிதன் இவன்தான் என திட்டவட்டமாக கூறமுடியாது.*** இவன் தான் அந்த மனிதனாயின் தவறான உபதேசத்தை போதிப்பதன் மூலம் பவுலுக்கு எதிர்த்து நின்றவன். ***சாத்தான் கூட்டத்தில் ஒப்புக்கொடுத்தேன் என்பது அப்போஸ்தல ஒழுங்கு நடவடிக்கையையும் 1தீமோ 1:20, 1கொரி 5:5*** உள்ளூர் சபையோடு உள்ள சகவாசம் துண்டிக்கப்படுவதனையும் காட்டுகின்றது.

**ஒழுக்க நடவடிக்கையின் மூலம் கற்றுக் கொள்வது:** ஒரு கிறிஸ்தவன் மனந்திரும்ப மறுக்கும் போது உள்ளூர் சபை ஒழுக்க நடவடிக்கையில் ஈடுபடலாம். **இதன் மூலம் பரிசுத்தவான்களின் பாதுகாக்கும் முக்கியத்தில் நின்று அப்புறப்படுத்தி** பிசாசினால் தாக்கப்படத்தக்க நிலைக்கு கொண்டு வருகின்றோம். **தேவ சித்தத்திற்கு கீழ்ப்படியும் உள்ளூர் சபை ஐக்கியமானது விசுவாசிக்கு ஒரு ஆவிக்குரிய பாதுகாப்பைக் கொடுக்கின்றது.** ஒரு விசுவாசியைத் தாக்க பிசாசு தேவனிடம் அனுமதி கேட்க வேண்டும். யோபு 1,2, லூக் 22:31-34 **ஒவ்வொரு உள்ளூர் சபையும் தீய சக்திகளோடு தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.**

கள்ளத்தீர்க்கதரிசிகள், கள்ள போதகர்கள் இப்போதும் உண்டு. **இதற்கு மூல காரணம் பிசாசு.** இவனே எல்லா தவறான போதனைகளுக்கும் காரணம். **ஒரு உள்ளூர் சபை ஆரோக்கியமான உபதேசங்களைப் போதித்தால் மாத்திரம் போதாது.** சுவிசேஷத்தை அறிவித்தால் மாத்திரம் போதாது **பிசாசின் பொய்களை வெளிக்காட்டி பிசாசை எதிர்த்து விசுவாசத்தைக் காக்க வேண்டும்.**

*தொடரும்...*

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)

# வினா விடை - 48
## சரியான விடை எழுதியாவர்கள்

01. தி.கலைக்குமரன் - புன்னாலைக்கட்டுவன
02. ம.றீகா - ஊர்காவற்றுறை
03. வி.கலியுகன் - ஊர்காவற்றுறை
04. வி.ஸர்மிளா - ஊர்காவற்றுறை
05. க.றெஜீவன் - ஊர்காவற்றுறை
06. து.கிருஷ்ணகுமார் - ஊர்காவற்றுறை
07. டிறோன் - ஊர்காவற்றுறை
08. து.கிரிசாந் - ஊர்காவற்றுறை
09. கு.சாந்தன் - ஊர்காவற்றுறை
10. சூ.ஜான்சி - நாவற்குழி
11. தி.ஜெகா - கொழும்பு 13

Happy New Year!

# எது தேவை?




**மாற்கு 1:39-42 (39.) கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர்பிரசங்கம் பண்ணிக்கொண்டும், பிசாசுகளைத் துரத்திக் கொண்டும் இருந்தார். 40. அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு: உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டிக் கொண்டான். 41. இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். 42. இப்படி அவர் சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான்.**

மேலே கூறப்பட்டது கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஓர் உண்மைச் சம்பவம். உலகிலே அநேக உண்மைச் சம்பவங்கள் நடந்து உலகை உலுக்கி வரும் இந் நாட்களிலே மனிதனுக்கு அவசியமான வாழ்வுக்கு அத்தியாவசியமான தேவை ஒன்று உண்டு. பணம் கிடைக்கின்றது, பொருள் வருகின்றது, விஞ்ஞானம் வளர்கின்றது, அணு ஆயுதம் சிறந்ததாகி, விலைமதிப்பற்ற தேசங்களையும் சின்னாபின்னமாக்குகிறது. பொருளாதாரங்களில் வீழ்ச்சி இவைக ளெல்லாம் ஏதோ ஓர் தேவையை நோக்கிய பயணமே என்றால் அது உண்மையிலும் உண்மை.

***அது எந்த உண்மை என்றால் இயேசு கிறிஸ்து என்னும் உண்மை ஆகும். அன்றைய குஷ்டரோகி சுகமாக மூன்று காரியங்கள் அவசியமாயிற்று.***

**01. அவரிடத்தில் வந்தான்.**

**02. அவரிடத்தில் பணிந்தான்.**

**03. அவரிடத்தில் விண்ணப்பம் பண்ணினான்.**

முதலாவது எமக்காக நாம் மரிக்க வேண்டிய இடத்தில் அவர் மரித்தார், அவர் உயிர்த்தெழுந்தார். அவரிடமே பாவமன்னிப்பின் நிச்சயம் எந்த மனிதனும் பெற வேண்டும். எனவே ஒரு மனிதன் தான் தன்னுடைய ஆத்தும தேவையை பூர்த்தி செய்வதே மேன்மையானது ஆகும்.

குஷ்டரோகி வந்தான் இயேசுவிடம். அவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது, இவரிடமே சுகமுண்டு, தனக்கு வாழ்வுண்டு என்று. வந்தவன் அவரே தெய்வம் என்று பணிந்து கொண்டான். உடனேயே வேண்டுதலை விண்ணப்பித்தான். உடனடிப்பதில் குஷ்டரோகி சுகமானான்.

அருமை நண்பரே, நீ எதை சிந்திக்கின்றாய்? உலகத்தைப்பற்றியா? உன்னைப் பற்றியா? முதலாவது உன்னைப் பற்றி சிந்தித்து இயேசுவுக்கு உன்னை அறிமுகப்படுத்து. அதன் பின்னர் நீ அறிவாய் உன் வாழ்வின் மாற்றத்தை. நீ உணர்வாய் உன் தெய்வத்தை.

இன்றே வா, வணங்கு, குணமாகு. எழுந்து செல், இயேசுவுக்காக வாழ்ந்திடு.

## வினா விடை - 49

01. கை, கால்களின் பெருவிரல்கள் தறித்துப்போடப்பட்டவன் யார்?
02. சூரியனையும் சந்திரனையும் நடுவானில் தரித்து நிற்கப்பண்ணியவன் யார்?
03. ஆகாசுடைய சூரிய கடிகாரத்தில் பத்துப்பாகை பின்னிட்டு திரும்பும்படி கர்த்தரிடம் வேண்டிக்கொண்டவன் யார்? யாருக்காக?
04. உன் மகனை இன்று தின்போம், நாளைக்கு என் மகனைத் தின்போம் என்று சொன்ன ஸ்திரி யார்?
05. உயிரோடிக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்று சொன்ன ஸ்திரி யார்?
06. யாருடைய பிரேதத்தை காட்டிலுள்ள ஒரு பெரிய குழியில் போட்டு, அவன் மேல் மகா பெரிய கற்குவியலை குவித்தார்கள்?
07. யாரை அக்கினியால் சுட்டெரித்து அதன் மேல் பெரிய கற்குவியலை குவித்தார்கள்?
08. கொலை செய்துவிட்டு கொலுக்கூடத்தின் வழியாய் போய்விட்டான் யார்?
09. தகப்பனையும் மகளையும் சுட்டெரித்தவர்கள் யார்?
10. ஒரு கூட்டம் மனிதர் ஒருவனை தேடுகையில் வீட்டுக் கதவு எது என தெரியாமல் குருட்டாட்டம் பிடித்துத் தடுமாறினது எப்போது?




# பதில் தரவேண்டாமா?

## வேதப்பகுதி: 1பேதுரு 2:20–25

நீ ஒரு தெருவில் சென்று கொண்டிருக்கின்றாய். நாய் ஒன்று உன்னைப் பார்த்து குரைத்துக் கொண்டு உன் பின்னால் வருகின்றது. **இப்பொழுது நீ என்ன செய்வாய்?**



- அங்கிருந்து ஓடிப்போக முயற்சிப்பேன்.
- நாயை அடித்து துரத்துவேன்.
- அதைக் கண்டு கொள்ளாமல் நடப்பேன்.

குரைக்கின்ற நாயைக் கண்டு ஓடினால் அது உன்னை அதிகமாகத் துரத்தும். அதனை தாக்க முற்பட்டால் அது உன்னை கடித்துவிடக் கூடும். குரைக்கின்ற நாய் கடிக்காது. எனவே அதைக் கண்டு கொள்ளாமல் நடப்பதே நல்லது.

இது போலவே சிலர் வேண்டுமென்றே பொறாமையினாலும் வெறுப்பினாலும் நம்மைக் குறித்து மோசமாகப் பேசுவார்கள். அவர்களை எதிர்ப்பதோ, அதைத் தடுக்க முயற்சிப்பதோ நல்லதல்ல. கர்த்தரிடம் அதைச் சொல்லிவிட்டு நாம் அமைதியாக இருக்க வேண்டும்.


**சிந்தனைக்கு:** நல்லதை செய்வதைத் தடுப்பதே பிசாசின் நோக்கம். எனவே பிசாசின் சோதனையை ஜெயித்து நன்மை செய்ய வேண்டும்.

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – செப்ரெம்பர் 30



# குறுக்கெழுத்துப்போட்டி – 47






குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம். - நன்றி

## இடமிருந்து வலமாக

1. பெரேயா பட்டணத்தார் இந்த பட்டணத்து ஜனங்களைவிட நற்குணசாலிகளாயிருந்தார்கள்.
5. நம்பிக்கையின் வாசல் என அழைக்கப்பட்ட பள்ளத்தாக்கு
6. ஓபேத்தின் தந்தை
8. ஈசாயின் ஏழாவது மகன்



## வலமிருந்து இடமாக

4. ரெபேக்காள், ஈசாக்கை கண்ட போது இதை அணிந்து கொண்டாள்
8. பெலிஸ்தர் வணங்கிய பிரதான ஒரு ஆண் தெய்வம்
11. உயிரோடிருக்கையிலே தனக்கென்று ஒரு தூணை நிறுத்தி அத் தூணுக்கு தன் பெயரைத் தரித்தவன்



## மேலிருந்து கீழாக

1. இங்கே 4000 பேர் போஷிக்கப்பட்டனர்
2. ஆரானின் மகன்
3. யோவான் இத் தீவில் இருக்கும் போது வெளிப்படுத்தலைப் பெற்றான்
7. பெற்றோர் இல்லாமல் பிறந்தவன்



## கீழிருந்து மேலாக

9. யூதனல்லாத போதிலும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு அவருடைய சித்தத்தை நிறைவேற்றிய ராஜா
10. உயிர்த்தெழுதல் இல்லையென வாதிடுபவர்கள்
11. எசேக்கியாவின் தாய்

# அருட்பணியாளர் சரிதை

## ரொச்சுங்கா புடயிட்டே தொடர்ச்சி...

வருடத்திற்குள் ஒன்பது கிராம பாடசாலைகளையும், ஒரு கிறிஸ்தவ மேற்பள்ளியையும் நிறுவினார். **பின்னர் தனது கல்வியை தொடருவதற்காகவும் மிஷன் பணிக்கான நிதியினை திரட்டுவதற்காகவும் தனது மனைவி மவாயுடன் ஐக்கிய அமெரிக்காவிற்கு திரும்பிச் சென்றார்.** பின்பதாக பத்தாயிரம் ஹமார் ஏற்பாடுகள் கப்பல் மூலமாக இந்தியாவை வந்தடைந்தன. ஆறு மாதத்துக்குள் அவ் அனைத்து பிரதிகளும் விற்பனையடைந்து முடிந்தன.

1960 ஆம் ஆண்டிற்கு பின்பதான பத்தாண்டு காலமானது ரோவிற்கும், மிஷன் பணிக்கும் பரபரப்பூட்டும் முக்கிய விளைவுகளைக் கொண்ட காலமாக இருந்தது. நன்கொடைகள் ஒரு வருடத்திற்கு இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கும் மேலாக அதிகரித்ததுடன், பணியானது இந்தியாவிலே துரிதமாக வளர்ச்சியடைந்து காணப்பட்டது. 1970ஆம் ஆண்டளவில் 350 தேசிய மிஷனெரிகளும், 65 கிராமிய பாடசாலைகள், ஒரு மேற்பள்ளி மற்றும் ஒரு மருத்துவ மனை காணப்பட்டன. எவ்வாறாயினும் எதிர்காலமானது அவ்வளவு செழிப்பானதாக இருக்கவில்லை. பொது உடைமைவாதிகள் அமைதியாக இருந்த ஹமார் இனத்திற்குள் கலவரங்களை உருவாக்கிக் கொண்டிருந்ததுடன். **ஹமார் வாலிபர்கள் மத்தியில் அக் கலகக்காரருடைய ஆதிக்கமானது அவ்வினத்திற்கும், கிறிஸ்தவத்திற்கும் ஒரு நேரடி அச்சுறுத்தலாக இருந்தது.** மீண்டுமாக மக்கள் ரோவுடைய தலைமைத்து வத்தை எதிர்பார்த்து, பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்திற்கு திரும்பும்படி வேண்டிக் கொண்டனர். **பரந்த ஆதரவும் பொது உடைமை வாதிகளின் மீது இலகுவான வெற்றியுமுண்டு என ரோவுக்கு உறுதி அளிக்கப்பட்டது.**

இந்த வாய்ப்பானது, ரோ உடன்படும் வண்ணமாகவே அவரை வெகுவாய் கவர்ந்திழுக்கக் கூடியதொன்றாக இருந்தது. மனைவி மவாய் தடுத்த போதிலும் தனது பெயரை பதிவு செய்வதற்காக முடிவுத் திகதிக்கு இரு நாட்களுக்கு முன்னர் டெல்லியை அடையும் விமானத்தை




பணத்திற்காக ஒழுங்கு செய்தார். **விமானம் குறித்த நேரத்தில் புறப்பட்டாலும், முடிவுத்திகதி முடிவடைந்து 15நிமிடங்கள் கழித்து புதுடெல்லியை அடையும் வண்ணம் சீரற்ற காலநிலையானது காலதாமதத்தை ஏற்படுத்தியது.** ரோவுக்கு இது ஒரு கடுமையான ஏமாற்றமாயிருந்தாலும், இச் சந்தர்ப்பம் பயனற்று போவதனை அவர் விரும்பவில்லை. அவர் ஹமார் சபை தலைவர்களினால் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த சிலுவை போர் சுவிசேஷ ஊழியத்தில் பலவந்தமாய் நுழைந்து கொண்டார். **அநேக மக்கள், துன்புறுத்தப்படுவதற்கான அச்சுறுத்தல்கள் மத்தியிலும், குடும்பத்தினருடைய புறக்கணிப்பின் மத்தியிலும் கிறிஸ்துவை சார்ந்து கொண்டார்கள். சிலுவை போர் ஊழியத்திலே ஒரு முஸ்லிம் மாணவன் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டது மிகவும் பயனள்ள ஒரு அனுபவமாக இருந்ததுடன் இச் சம்பவமானது ரோவில் ஆழமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.**

அது வரையிலும் ரோவிற்கு ஹமார் இனம் மற்றும் அதன் சுற்றுப்புறம் குறித்த பாரம் மாத்திரமே இருந்தது. **ஆனால் இப்போதோ முழு உலகையும் குறிக்கும் வகையில் அவர் சிந்திக்க ஆரம்பித்து விட்டார்.** உலகை சென்றடைவது என்பது முழுமையாக முடியாததொன்றாய் விளங்கியது. இந்தியாவில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு ஆயிரம் மிஷனெரிகளைக் கொண்ட ஒரு குழு தேவைப்படும் என்றும் அதை ஸ்தாபிப்பதற்கு ஆயிரம் வருடங்கள் எடுக்கும் என்றும் ரோ காணிப்பட்டார். இதற்கு ஒரு சிறந்த வழி இருக்க வேண்டும். இதற்கான ஒரு தீர்வை பெற்றுக் கொள்வதற்காக ரோ ஜெபிக்க ஆரம்பித்தார். அவர் ஜெபிக்கின்ற வேளையிலே வழக்கத்துக்கு மாறான முறையில் பதிலினை பெற்றுக் கொண்டார். தொலைபேசி விளம்பரத்தின் மணி ஓசை **"உங்கள் விரல்கள் நடக்கட்டும்"** என்பது அவருடைய உள்ளத்தில் ஒடிக்கொண்டே இருந்தது. அவரால் ஜெபத்தில் கவனம் செலுத்த முடியாததால் ஜெபிப்பதனை நிறுத்திவிட்டார். அவர் முழந்தாலில் இருந்து எழுந்தவுடன் அவருடைய கண்கள் மேசை மீது இருந்த இரண்டு தொலைபேசி கட்டளைச் சுவடிகளை நோக்கியது. திடீரென அவருக்கு தரிசனம் தெளிவாகியது. அந்த புத்தகங்களில், ரோ சந்திக்க நினைத்த அனைத்து தலைவர்களினதும், செல்வாக்கு மிக்க மக்களினதும், சிறந்த கல்விமான்களினதும் பெயர் மற்றும் விலாசங்களைக் கொண்டிருந்தன.

புதிய ஏற்பாடுகளை தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு அஞ்சல் வழியாக அனுப்புவதே ரோ தேடிக்கொண்டிருந்த ஊழிய முறையாகும். அதிகளவில் விற்பனையாகும் லிவிங் வேதாகமப் புத்தகங்களின் உரிமையாளர் கெனத் டெய்லரை தொடர்பு கொண்டு, விற்பனையின் ஒரு பகுதியையும் செலுத்தாமல் தனக்கு தேவையான அனைத்து பிரதிகளையும் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். உலக வேதாகம இல்லச்

சங்கம் அவ்வேதாகம பிரதிகளை குறைந்த விலையில் அச்சிடுவதற்கு ஒத்துக்கொண்டது. அந்த ஏற்பாடுகளோடு 1971ஆம் ஆண்டு உலகத்திற்கான வேதாகமம் பிறந்தது. 'மார் இனத்திற்கான மிஷன் பணி தொடர்ந்த போதிலும், அது புதிய சர்வதேச அமைப்பின் ஒரு பகுதியாக மாத்திரமே இருந்தது.

விநியோகத்திற்காக அச்சிடப்பட்ட புதிய ஏற்பாட்டின் முதல் பக்கத்தில் ரோவினுடைய வாழ்க்கைச் சாட்சியும், புதுடெல்லி விலாசமும் உள்ளடக்கப் பட்டிருந்தது. அஞ்சல் வழியாக முதல் பகுதிகளை அனுப்பியவுடனேயே கடிதங்கள் வந்து குவியத்தொடங்கின. **முதலாவது அனுப்பட்ட 50000 பிரதிகள் 20000றிகும் மேற்பட்ட மாறுத்தரங்களை கொண்டுவந்தன. இதுவே அநேக இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றும் சீக்கியர்கள் வேதாகமத்தைக் கண்டு அதனை வாசித்த முதல் சந்தர்ப்பமாகும்.** அவர்கள் வேதாகமத்தை பற்றி மேலும் அறியவும், குறித்த சில கேள்விகளுக்கான பதில்களை பெற்றுக் கொள்ளவும் தேவையுடையவர்களாய் இருந்தார்கள். இந்தியாவின் தொலைபேசி வாடிக்கையாளர்களை அணுகுவதே மிகவும் பெரிய ஒரு இலக்காய் இருந்தது. **ஆனாலும் ரோ விரைவாக எல்லைக்கு அப்பால் உள்ள பர்மா, தாய்லாந்து, இலங்கை மற்றும் முழு உலகின் ஐந்நூறு மில்லியன் தொலைபேசி வாடிக்கையாளர்களை நோக்கினார்.** அஞ்சல் வழியாக புதிய ஏற்பாடுகளை அனுப்புவதும், விசாரணைகளுக்கு மாறுத்தரம் வழங்குவதும் சுவிசேஷத்தை பரப்புவதற்கு கூடுதலான வாசல்கள் திறப்பதற்கு வழி நடத்தியது. **ரோ இந்தியாவிற்கு திரும்பி, ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்த போது, கேட்போர் கூடமானது கூட்டம் ஆரம்பிப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்பதாகவே முழுவதும் நிரம்பிவிட்டது. அழைக்கப்பட்டதன் காரணமாக நூற்றுக்கணக்கானோர் கிறிஸ்தவனாகுவதைக் குறித்து மேலதிகமாக அறிந்து கொள்வதற்காக முன்பதாக கூடினார். இதுவே உலகை கிறிஸ்துவிற்காக அடைவதற்கான தனி மனிதன் ஒருவனுடைய தரிசனத்தின் ஆரம்பமாகும்.**

(இவ் வாழ்க்கைச் சரிதை, ரூத்.ஒ.டகர் எழுதிய "எருசலேமிலிருந்து இரியன் ஜாயாவுக்கு" எனும் நூலிலிருந்து பெறப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டது)

**முற்றும்.**

## முக்கிய அறிவித்தல்

*அன்பின் அனல் வாசகர்களே!*

*இதுவரையும் நீங்கள் அனலுக்கு வழங்கி வரும் ஆதரவுக்கு நன்றி. தற்போது நாட்டில் தபால் செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே அனலின் சந்தாவையும் அதிகரிக்க வேண்டியுள்ளது என்பதனை மிகுந்த மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் தொடர்ந்தும் தங்கள் ஒத்துழைப்பை வழங்கி உதவுங்கள். சந்தா விபரத்தினை கடைசிப்பக்கத்தில் பார்வையிடவும்.* **நன்றி – ஆசிரியர்.**

# குறுக்கெழுத்துப் போட்டி – 46
## சரியான பதில்கள்

<u>இடமிருந்து வலமாக</u>

01. கலிலேயா
05. பவுல்
06. எரிகோ
09. யாபேஸ்

<u>மேலிருந்து கீழாக</u>

01. கப்பர் நகூம்
02. கிரியை
04. யாக்கோபு
06. எரேமியா

<u>வலமிருந்து இடமாக</u>

03. சமாரியா
07. அன்பு
08. சவுல்
11. எசேக்கியா

<u>கீழிருந்து மேலாக</u>

10. பர்னபா
11. எருசலேம்

# வினாவிடை – 48
## சரியான பதில்கள்

*01. தேவதூதன் – ஆதியாகமம் 19:17*
*02. தாவீது – 2சாமுவேல் 3:31*
*03. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் – 1கொரி. 15:51–57*
*04. யோனா – யோனா 4:6–9*
*05. கோலியாத் – 1சாமுவேல் 17:43*
*06. ஏலியின் குமாரர் – 1சாமுவேல் 2:12,25*
*07. அப்பொல்லோ – அப்போஸ்தலர் 18:24*
*08. கிதியோனை – நியாயாதிபதிகள் 6:23*
*09. 2இராஜாக்கள் 2:11, 6:17*
*10. யேசபேல், புருஷனுக்கு துரோகம் செய்த ஸ்திரி – 2இராஜாக்கள் 9:34, 30 எண்ணாகமம் 5:11–27*

Happy New Year!

# ஜனவரி

## பூத்துக்கள்

கருவறையில் கால்மிதித்த
ஜனனம் கல்லறையிலும்
ஓர் ஜனனம் தான்.

ஆள் தேடும் படை
அருகில் இருந்தால்
அது அருட்பணியே

கற்பனை "10" தான்
ஆனால்
கர்த்தர் ஒருவரே

நீ யார்? என்பதனை
அறிந்தால்
நீ ஓர் தலைவன்

பரிசுத்தம் என்பது
பணிவால் வருவதல்ல
பரத்தில் இருந்தே
வருவது

பாவியே நீ வா
என்று சத்தமிடல்
இயேசுவிடம் மாத்திரமே

நித்தியத்தில் என்றும்
தம்மைத்
தொலைத்தவர்கள்
நிரந்தர நரக வாசிகள்

தொலைந்த உறவை அறிய
பரிசுத்த
அறிவு தேவை

விடுதலை இல்லாத
சத்தியங்கள்
விலை போகும் பரிசுகள்

சத்தியத்தை நீ
மறந்தாய்
நீ பூமியில் தொலைந்தாய்

அனல் 2012

# புத்தாண்டின் வாக்குத்தத்தச் செய்தி

# தேவன் நினைத்தது தடைப்படாது!

**"தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்: நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்." யோபு 42:2**

**ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எனது "2012 ஆம் ஆண்டு புத்தாண்டு" நல் வாழ்த்துக்களை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

**நிச்சயமாகவே கடந்த ஆண்டு அவர் நடத்துதல் அற்புதமாகவே இருந்திருக்கும் என்று விசுவாசிக்கின்றேன்.**

கடந்த ஆண்டிலே ஆண்டவர் **"அவர்களைப் பார்த்து பயப்பட வேண்டாம் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கின்றார், அவர் வல்லமையும் பயங்கரமுமான தேவன்" உபாகமம் 7:21** என்ற வார்த்தையை தந்து எம்மை வழிநடத்தினார். இந்த வார்த்தையை ஆண்டவர் கொடுத்த போது சற்று சிந்தித் தேன் இது நிச்சயமாகவே நமக்கான வாக்குத்தத்தமா? என்று கூட யோசித்தேன், **ஆனாலும் ஆண்டவர் தெளிவாக இந்தவார்த்தைகளைத் தந்தார், உண்மையிலேபல சாட்சிகளை**




கேட்கவும் இவ் வார்த்தை தேவன் தந்தார் என்பதை நிச்சயப் படுத்தி இதை அனுபவமாகவும் மாற்றி தந்தபடியால் ஜீவனுள்ள தேவனை மகிமைப்படுத்துகின்றேன்.

**இம்மட்டும் வழி நடத்தி காத்து வந்த எம் ஆண்டவர் நிச்சயமாகவே இந்த ஆண்டிலும் வழிநடத்துவாராக!**

இப் பிறந்திருக்கும் புதிய ஆண்டிலே **யோபு 42:2 "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்: நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்."** என்ற வார்த்தை மூலம் வழிநடத்துவாராக.

வேதாகமத்தை நாம் அவதானிக்கின்ற போது: **சர்வ வல்லமையுள்ள தேவன் அவர் சகலத்தையும் செய்ய வல்லமையுள்ளராய் இருந்துள்ளார்......... அவர் இருக்கின்றார் அவர் இனிமேலும் இருப்பார். அவர் நினைவு கூரும் தெய்வம்.**

இவ் வார்த்தையின் பின்னணியை சற்று அவதானித்தால் அவனை சூழ இருந்தவர்கள் பல வார்த்தைகளை அலப்பிக்கொண்டு அவன் சோர்ந்து போகத்தக்கதாய் பேசினாலும் யோபு திடமாக ஆண்டவரை பார்த்து கூறுகின்றான் **"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர் நீர் செய்ய நினைத்தது தடைபடாது"** என்ற ஓர் மிகத் தெளிவான உறுதியான அறிக்கையை ஆண்டவரை பார்த்து சொல்கின்றான், அது மாத்திரமல்ல தன் சிநேகிதர்களுக்காக தன் கஷ்டம், தன் வியாதி, தன் துன்பத்தின் மத்தியிலும் வேண்டுதல் செய்கின்றான்.

இதை அதானித்த ஆண்டவர் அவனுக்குசெய்த காரியம்: **யோபு 42:10 கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்.**

சில காலங்களாக மிகவும் கஷ்டமான பாதைக்குள் எல்லாராலும் அருவருக்கப்படதக்கவனாக இருந்தான் அவ்வேளையிலும் யோபு தேவனுடைய வல்லமையை உணர்ந்து இவ் வார்த்தைகளை கூறிய போது, ஆண்டவருடைய அநாதி வல்லமை வெளிப்படுகின்றது. **யோபைப்போல தேவனுக்கு முன்பாக உத்தமமானவர்களாக சன்மார்கர்களாக வாழ்ந்த உங்களுடைய வாழ்க்கை கடந்த காலங்கள் அல்லது வருடங்கள் கசப்பானதாக எல்லாரும் உங்களை புறக்கணித்த கடினமான பாதைக்கூடாக நடந்து இந்த வருடமும் என்ன நடக்குமோ?...... என்று அங்கலாய்த்தவண்ணம் இருக்கலாம்,** ஆனால் தேவனுடைய வார்த்தையை நம்பி யோபுவுக்கு

இரட்டத்தனையாக கொடுத்தவர், உங்களுக்கும் செய்ய வல்லவர் என்பதை முழு இருதயத்துடனும் நம்பி யோபு கூறியதுபோல **"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர் நீர் செய்ய நினைத்தது தடைபடாது"** என்று இன்று கூறுவீர்களாய் இருந்தால் **நிச்சயம் உங்களுக்கும் அவர் அற்புதம் செய்ய வல்லவர்.**

***யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தது போல நாமும் மற்றவர்களது நல்வாழ்விற்காக, மற்றவர்கள் நன்மையடையவேண்டும் என்று அவர்களுக்காக இந்த ஆண்டிலே வேண்டுதல் செய்வோம். சிலவேளை நண்பர்கள் தான் ஆனாலும் உங்களுக்காக ஒரு முள்ளாக, உங்களுக்கு நன்மை செய்யாதவர்களாகவும் இருக்கலாம், எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் அவர்களுக்காக வேண்டுதல் செய்யுங்கள் நிச்சயம் யோபை கண்ட தேவன் உங்களையும் காண்கின்றார்.***

இன்னுமொரு சம்பவத்தை **2 இராஜாக்கள் 17** ஆம் அதிகாரத்தில் அவதானிப்போமாகில் **தேவனுடைய தீர்க்கதரிசியாகிய எலியாவை கொண்டு தேவன் செய்யவேண்டிய அநேக காரியங்கள் இருந்தபடியால், அவன் உயிரை பறிக்கும்படி வலைபோட்டபோதும் அண்டவர் அவனை ஒளித்து வைத்தார். அது மட்டுமல்ல தவறாமல் அவனுக்கு ஆகாரம் கொடுக்கும்படி காலையும் மாலையும் காகத்திற்கு கட்டளையிட்டார், மற்றவர்கள் பஞ்சத்தினால் கஷ்டப்பட்ட போதிலும் தமது மனிதனுக்கு மிகப்பெரிய திட்டம் வைத்திருந்த ஆண்டவர் அதை எப்படியும் தாம் செய்ய வல்லவர் என்றதை நிரூபித்து அவனுக்கு ஆகாரம் கொடுத்து உயிர் பிழைக்கும் படி செய்தார்.**

***இறுதியாக புதிய ஏற்பாட்டிலும் ஒரு சம்பவத்தை பார்க்கலாம்.*** இராயனுக்கு முன்பாக பவுல் நிற்க வேண்டும் என்பது ஆண்டவருடைய திட்டம், தேவ வார்த்தை அங்கும் செல்ல வேண்டும் என்ற நோக்கம் இருந்தது. **அப்போஸ்தலர் 27,28 ஆம் அதிகாரங்களில்** அவதானிக்கின்ற போது, அந்த பரம திட்டத்தை நிறைவேற்ற கப்பல் பிரயாணமாய் போய் கொண்டிருக்கும் போது கடும் காற்று மோதி பவுலையும் அவனுடன் பயணம் செய்பவர்களை மாய்த்துப்போட முயற்சித்தது ஆனாலும் தேவதூதன் தைரியப்படுத்தி திரும்பவும் தேவ திட்டத்தை பவுலுக்கு அறிவிக்கின்றான் **அப்போஸ்தலர் 27:23-24 (23.) ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில்** வந்துநின்று: 24. பவுலே. பயப்படாதே, **நீ இராயனுக்குமுன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னு**

**டனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான்.** அதன் பிற்பாடு அவர்கள் கப்பலில் இருந்துகுறைக்கக்கூடிய பொருட்களை தூக்கி கடலிலே வீசி கப்பலின் பாரத்தை இலகுவாக்க முயற்சித்தனர், ஆனாலும் கப்பல் உடைந்து போகும் நிலைமை ஏற்பட்டபடியினால் போர்ச்சேவகர் யாரும் தப்பிப் போகாதபடி கொலைசெய்ய யோசனை பண்ணியபொழுது அங்கு ஓர் நூற்றுக்கதிபதி அவர்களுடைய யோசனையை தடுத்து நிறுத்துகின்றான் **அப்போஸ்தலர் 7:42,43 (42.) அப்பொழுது காவல்பண்ணப்பட்டவர்களில் ஒருவனும் நீந்தி ஓடிப் போகாதபடிக்கு அவர்களைக் கொன்று போடவேண்டுமென்று போர்ச்சேவகர் யோசனையாயிருந்தார்கள். 43. நூற்றுக்கு அதிபதி பவுலைக் காப்பாற்ற மனதாயிருந்து, அவர்களுடைய யோசனையைத் தடுத்து, நீந்தத்தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரையேறவும்,**

ஆண்டவருடைய திட்டத்தை நடைமுறைபடுத்த விடாமலும் பவுலை கொலை செய்தால் அந்த தேவ திடடம் நிறைவேறமாட்டாது என்பதையும் அறிந்து பிசாசு செயற்பட ஆரம்பித்தான், **ஆனாலும் தேவன் ஏதோ ஓர் வழியை ஏற்படுத்தி அவனை காப்பாற்றினார்.** முதலாவது பெரும் பயம் ஏற்படுத்தக் கூடிய பெரும் காற்று மோதியது **அடுத்து கப்பல் உடைந்தது. அதன் பின் போர்சேவகர் யாரும் தப்ப கூடாது என்று கொலைசெய்ய எழும்பினர், அவனை காப்பாற்றக்கூடிய வழி ஏதும் இல்லை போல தென்பட்டாலும் ஆண்டவர் அவனை அழிய விடாமல் காப்பாற்றினார்.** இவை எல்லாம் தாண்டி பத்திர மாய் கரையேறினபோது, அவர் கள் குளிர்காய்ந்து இளைப் பாறும் போது விறகிலிருந்து ஓர் விஷப் பூச்சி அவன் கையை கவ்வி கொண்டது. எல்லாருக் கும் தெரிந்துவிட்டது பவுல் இனி காப்பாற்றப்பட முடியாத வன், அவன் மரித்துவிடுவான் என்று, **ஆனாலும் அவ்விடத்தில் தேவ வல்லமை வெளிப்பட அவன் பாதுகாக்கப்பட்டான் அது மாத்திரமல்ல தேவதிட்டம் நிறைவேற இராயனுக்கு முன்பாக நின்றான்.**

***விசேஷமாக ஆண்டவருக்காய் பயபக்தியாய் வாழும் ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்க்கையிலும் தேவன் பல திட்டங்களையும் நோக்கங்களையும் வைத்திருக்கின்றார்,*** ஆனால் பல வேளைகளில் இவற்றை ஆண்டவர் செய்வாரோ என்ற எண்ணம் மனிதர்களுக்குள்ளே ஏற்படுகின்றது. **இந்த புதிய ஆண்டிலே ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளாகிய உங்களுக்கு நினைப்பூட்ட**

விரும்புகின்றார் **தாம் சகலமும் செய்ய வல்லவர் என்பதை.** பவுலுக்காக தாம் வைத்த திட்டத்தை நிறைவேற்றி முடிக்கும்வரை அவனை உயிருடன் காப்பாற்றிய ஆண்டவர் உங்கள் வாழ்க்கையிலும் அவர் வைத்திருக்கின்ற திட்டத்தை நிறைவேற்றி முடிக்கும் வரையும் உங்களை காக்க வல்லவர்,

**பிரியமானவர்களே உங்களுடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட யோபுவைப்போல, எலியாவைப்போல, பவுலைப்போல அல்லது அதைப் பார்க்கிலும் கடினமான காரியங்கள் நடைபெறலாம்,** ஆனாலும் ஒன்றை ஞாபகம் வைத்திருங்கள் நாம் அவரோடு கூட அவரை பிரியப்படுத்தி நடப்போமாக இருந்தால **அவர் நம்முடைய வாழ்க்கையில் தாம் சொல்லிய வாரத்தைகளும் தாம் திட்டமிட்டு வைத்திருக்கும் அத்தனை காரியங்களையும் அவர் செய்ய வல்லவர் அவர் நினைத்தது தடையேபடாது.** ஏனென்றால் அவருடைய வார்த்தை இந்த ஆண்டிலே "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்,




**நீர் செய்ய நினைத்தது தடைபடாது" யோபு 42:2** என்று யோபு கூறியது போல **அவருடைய வல்லமைகளையும் மகத்துவங்களையும் அறிந்து இந்த வார்த்தையை பற்றிப் பிடிப்போமாகில் இந்த வருடம் பூராகவும் அவர் வல்லவர் என்பதையும் நினைத்ததை செய்வார் என்பதையும் உங்கள் சொந்தக் கண்களே காணும். அவருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கின்றது. ஆயத்தப்படுங்கள்! ஆயத்தப்படுத்துங்கள்!!.**

முற்றும்.

**தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக !**

**போதகர் ஜோஹணன் டி.பிலிப்**



## குறுக்கெழுத்துப் போட்டி - 46
## சரியான பதில் எழுதியவர்கள்



*01. தி.ஜெகா - கொழும்பு 13*

*02. மா.ஜெயந்தி - மானிப்பாய்*

*03. சி.சிந்துஜா - மானிப்பாய்*

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள்
உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி
சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால்
சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 140.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர் :-......................................................

விலாசம் :-......................................................

..............................................................

..............................................................

..............................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

# 2012 புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

To: ........................................................................

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.